International Peer Reviewed & Refereed Journal, Open Access Journal
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

20 - 2 April - June 2026

Published on 14, April - June 2026 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# நீர் வழிபாடும் சடங்கியலும்

**பெ. பாண்டியன்**
முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதி நேரம்)

**முனைவர் மா. இராஜவேல்**
உதவிப் பேராசிரியர் & ஆய்வு நெறியாளர்
தமிழாய்வுத்துறை, அறிஞர் அண்ணா அரசு கலைக் கல்லூரி
விழுப்புரம் -605 602

**ஆய்வுச்சுருக்கம்**

நீர் என்பது வாழ்வியலுக்கு மட்டுமல்லாமல் வழிபாட்டிற்கும் முதன்மையானதாக அமைகின்றது. தமிழர்களின் நீர் வழிபாடு பழங்காலந்தொட்டு தற்காலம் வரை தொன்றுதொட்டு நிகழ்ந்துகொண்டிருக்கின்றது. நடுகல் வழிபாடு தொடங்கி, தற்காலத்தில் இல்ல வழிபாடு, திருவிழா வழிபாடு, ஏனைய சடங்கியல் முறை வரை நீர் வழிபாடு முதன்மையானதாக அமைகின்றது என்பது இந்த ஆய்வின் சுருக்கம் ஆகும்.

**முன்னுரை**

பழங்காலத்தில் தெய்வ வழிபாடானது திணைநிலை அடிப்படையில் உருவானதாகும். திணை நிலை வழிபாட்டைத் தாண்டி, சிவன், மால் போன்ற பெருந்தெய்வ வழிபாடும், நடுகல், இல் தெய்வம் போன்ற சிறு தெய்வ வழிபாட்டு முறைகளும் காணப்படுகின்றன. வழிபாட்டு முறைகளைப் பெருந்தெய்வம், சிறுதெய்வம் என இருவேறாகப் பிரிக்கப்பட்டாலும், இருவேறு தெய்வங்களுக்கும் வெவ்வேறு வகையான வழிபாட்டு முறைகள் உள்ளன. சிறு தெய்வ வழிபாடுகள் யாவும் தமிழர்களின் பண்பாட்டோடு தொடர்புடையது. சிறுதெய்வ வழிபாட்டினிலேயே ஒவ்வொரு வட்டாரத் தெய்வங்களுக்கும் வெவ்வேறு வகையான வழிபாட்டுக் கூறுகள் உள்ளன. பெரும்பாலான சிறு தெய்வங்களுக்குப் பலியிட்டுப் படைக்கப்படும் வழிபாட்டு முறையே காணப்படுகிறது. உணவு படைக்கப்படும் முன்னர் நீரின் பயன்பாடு முதன்மையாகின்றது.

தமிழர்களின் வழிபாட்டில் நீர் முதன்மையான ஒன்றாகக் காணப்படுகின்றது. பழங்காலத்தில் போரினில் விழுப்புண்பட்டு வீர மரணம் அடைந்த வீரர்களுக்கு எடுக்கப்படும் நடுகல்லில் இருந்து தொடங்குகிறது நீர் வழிபாடு. கல்லை நடுவதற்கு முன்பு குளிர்விப்பதற்கு அதனை நீரில் இடுகின்றனர் அல்லது கல்லை நீரால் சுத்தம் செய்கின்றனர். இதனைத் தொல்காப்பியம் “**நீர்ப்படை**” (தொல்.பொருள்.புறத்.நூ - 63:19) என்றும், புறப்பொருள் வெண்பாமாலை “**கல்நீர்ப்படுத்தல்**” (புறப்பொருள்.பொதுவியல்-1:4) என்றும் குறிப்பிடுகிறது. பழங்கால நடுகல்லில் தொடங்கும் இந்த நீர் சடங்கியல் முறையானது தற்கால வழிபாட்டுச் சடங்கியல் முறைகளிலும் காணப்படுகின்றது. தற்காலத்தில் புதிதாக வடிக்கப்பட்ட தெய்வச் சிலையினை கோயில் கருவறையில் வைப்பதற்கு முன்பு ஒரு மண்டலம் (நாற்பத்தெட்டு நாட்கள்) முழுதும் நீரில் இட்டு குளிர்விப்பர். தெய்வங்களுக்குப் பூசை செய்யும்போது கூட, நீரினால் தெய்வத்தைக் குளிர்விப்பதும் பழங்கால நடுகல் வழிபாட்டின் தொடக்க நிலை

ஆகும். இந்நிலையில் நீரைப் படைத்து வழிபடல் என்ற ஒற்றைப் பொருண்மையினை மட்டுமே எடுத்துக் கொண்டு இக்கட்டுரைப் பயணப்படுகின்றது.

## நீர்த்தெய்வம்

நீர்நிலைகளில் தெய்வங்கள் வாழ்கின்றன என்ற நம்பிக்கை கொண்டவர்கள் தமிழர்கள். சில நீர் நிலைகளுக்குத் தெய்வங்களின் பெயர்களையேச் சூட்டியுள்ளனர். சில நீர் நிலைகளை தெய்வங்களாகக் கொண்டு வழிபடவும் செய்கின்றனர். **“மலைக் காடுகளில் உள்ள சுனைகளில் ‘சூர்மகள்’ அரமகள் என்னும் அணங்குகள் (மோகினி கள்) வாழ்கின்றனர் என்பது பழைய நம்பிக்கை”** (பண்பாட்டு அசைவுகள். தொ.பரமசிவம். ப-18) என்ற கூற்று நீர்நிலைகளில் தெய்வங்கள் வாழ்கின்றன என்பதை மெய்ப்பிக்கின்றது . காவிரிக்கரையில் காவிரித்தாய், சில கிராமங்களில் நீர்நிலையின் அருகில் கெங்கையம்மன் போன்ற தெய்வப்பெயர்கள் எல்லாம் இதற்குச் சான்றுகளாய் அமைகின் றன. நீரினை தெய்வமாக எண்ணிப் போற்றியதன் விளைவே இப்பெயரெல்லாம்.

சங்க காலத்தில் திணை வைப்பின் அடிப்படையிலேயே நீருக்கென ஒரு தெய்வம் இருந்ததினை தொல்காப்பியம், **“வருணன் மேய பெருமணல் உலகமும்”** (தொல்.பொருள்.நூ-5:4) என்று குறிப்பிடுகின்றது. வருணன் என்னும் தெய்வம் மழைத்தெய்வமாகும். நீரினை முதன்மைப் படுத்தியதனாலேயே மழைக்கென ஒரு தெய்வத்தை உண்டாக்கி, அதை நெய்தல் நிலத் தெய்வமாகக் கொண்டு வணங்கியுள்ளனர். அத்தோடு மருத நிலக் கடவுளான இந்திரனும் வானிலையின் கடவுள் ஆவர். மழை, இடியுடன் கூடிய மழை மேகங்களைத் தரும் கடவுளாகவும் விளங்குகிறார்.

தாய் தெய்வங்களிலும் மழை தெய்வங்கள் உண்டு. மாரியம்மன் என்று அழைக்கப்படும் கிராமப்புறத் தெய்வங்கள் யாவும் மழைக்குரிய தெய்வங்கள் ஆகும். ‘மாரி’ என்றால் மழை என்பதனையே குறிக்க வல்லது. மாரியம்மன் என்றால் மழைக்குரிய தெய்வம் என்று பொருள்படும். **“தமிழகக் கிராமங்களில் பெரிதும் நடைபெறும் அம்மன் வழிபாடு மழை வேண்டும் மாரியம்மன் வழிபாடேயாகும். அவ்வழிபாட்டில் இடம் பெறும் கரகத்தில் ஆற்று நீரினை நிரப்பி இதனையே தெய்வமாகக் கருதி வழி படுகிறார்கள்”** (சிறுதெய்வ வழிபாடும் நம்பிக்கைகளும். சதானந்தன். ப-7) இந்த மாரியம்மன் வெப்பக்காலங்களில் ஏற்படும் அம்மை போன்ற நோய்களைப் போக்கும் தெய்வமாகவும் காணப்படுகின்றாள். மிகையான கிராமப்புறங்களில் எண்ணற்ற தாய் தெய்வங்கள் உண்டு. அதனிடம் மழை வரம் வேண்டி சிறப்பு வழிபாடுகளும் நடத்தப்படுவதால் தாய் தெய்வங்களும் மழைக்குரிய தெய்வங்களாகக் கருத இடமுண்டு. புதுச்சேரி மாநிலம் காரைக்கால் மாவட்டத்தில் உள்ள திருநல்லாறுக்கு அருகில் கீழவூர் என்னும் ஊரில் ‘ஸ்ரீமழை மாரியம்மன்’ என்ற தெய்வம் உள்ளது இதற்குச் சான்றாக அமையும். தென்னாற்காடு மாவட்டத்தில் பொங்கல் விழா முடிந்த மூன்றாம் நாள் ஆற்றுத் திருவிழா என்ற ஒன்று நடைபெற்று வருவதும், தற்காலத்தில் காவிரிக் கரையில் நடக்கும் ஆடிப்பெருக்கு விழாவும் நீரை முதன்மையாகக் கொண்டு வழிபடும் நோக்கமாகும்.

## நீர் வழிபாடு

சிறுதெய்வத்திற்கு நீர் வழிபாடு என்பது முதன்மையான ஒன்றாக அமைகின்றது. இந்த நீர் வழிபாடானது சிறு தெய்வங் களுக்கு மட்டுமல்லாமல் இல்லங்களில் நடைபெறும் வழிபாடுகளிலும் சிறப்பிடம் பெறுகின்றது. விழாக்கால வழிபாட்டில் படைக்கப்படும் பொருட்களில் தேங்காய் முதலிடம் பெருகின்றது. தேங்காயை உடைத்து அதன் நீரையும் வழிபாட்டிற்காகப் பயன்படுத்துகின்றனர். சில இடங்களில் தேங்காய் உடைப்பதற்கு முன்பே சிறு சொம்பில் பாதி அளவு நீர் இட்டு, பின்னர் உடைக்கும் தேங்காயின் நீரை அதில் இட்டு நிரப்புகின்றனர். நிறை சொம்பில் இருக்கும் அந்த கலப்பு நீரை உணவுப் படையலினைச் சுற்றி மும்முறை தொட்டு இடமிருந்து வலமிடுகின்றனர். இதற்கு ‘நீர் விளாவுதல்’ என்று பெயர். இது இல்லங்களில் மட்டுமல்லாமல் கோயில்களிலும் காணப்படக்கூடிய முக்கிய சடங்கியல் முறை ஆகும். இந்த படைத்த நீரை ஈசான

மூலையில் வீட்டின் மேற் கூரையின்மேல் ஊற்றி விடுகின்றனர். சிலர் அப்படியே வைத்துவிட்டும் வருகின்றனர். இது காக்கைக்கான உணவாகவும் பயன் படுகிறது.

தெய்வ வழிபாட்டுச் சடங்கியலிலும், வீட்டு வழிபாட்டுச் சடங்கியலிலும் நீரை வழிபடல் என்பது முதன்மையான ஒன்றாகக் காணப் படுகிறது. “**தெய்வ வழிபாட்டுச் சடங்கு களைப் போலவே தமிழர்களின் வீட்டுச் சடங்குகளிலும் நீர் சிறப்பிடம் பெறுகின்றது. சொம்பு நீரில் அல்லது குவளை நீரின் மேல் பூக்களையோ, பூவிதழ்களையோ இட்டு வழிபடுவது எல்லாச் சாதியாரிடமும் காணப் படும் பழக்கம்**” (பண்பாட்டு அசைவுகள். தொ.பரமசிவம். ப-18) என்ற கூற்று உறுதி செய்கின்றது. மேலும் இறப்பு வீட்டிலும் கூட நிறை சொம்பு நீரை வீட்டின் முன் நிலைப்பகுதியில் இரவுநேரங்களில் வைப்பர். இறந்தவர் தெய்வமாகவோ அல்லது ஆவியாகவோ வந்து நீரைப் பருகிவிட்டுச் செல்வர் என்ற நம்பிக்கை கொண்டவர்களாக இருக்கின்றனர். இறந்தவர் நீர் வேட்கையோடு இறந்திருப்பின் இந்த நீரினைப் பருகி வேட்கையினைத் தீர்த்துக் கொள்வதாக நம்பிக்கை கொள்கின்றனர். இயற்கையாக அல்லது அதற்கு மாறுபட்ட முறையில் இறக்கும் எல்லோருக்கும் இந்த நீர்ச் சடங்கியல் முறை பொதுவாக அமைகின்றது. “**இயற்கையல்லாத முறையில் நெருப்பில் சிக்கி இறந்தவர்கள் நீர் வேட்கையோடு இறப்பது இயல்பாகும். எனவே அவ்வாறு இறந்தவர்களின் நினைவாக நீர்ப்பந்தல் அமைப்பதும் தமிழர்களின் வழக்கம்**”. (பண்பாட்டு அசைவுகள். தொ.பரமசிவம். ப-19) என்ற முறையும் வழக்கில் இருந்து வருகின்றது. இடுகாட்டில் நடைபெறும் இறப்புச் சடங்கியலில் பானை நீர் கொண்டு இறந்தாரைச் சுற்றி மும்முறை வலம் வருவதிலிருந்து நீர் எல்லாச் சடங்கியலிலும் முதன்மை இடம் பெருகின்றது என்பது புலனாகிறது.

**தெய்வங்களுக்கான நீர்**

நீராடுதல் என்பது மிகப்பெரிய சடங்கியல் முறை ஆகும். தமிழில் பரிபாடல், திருப்பாவை போன்ற இலக்கியங்கள் நீராடும் சடங்கியல் முறையினைப் பற்றி பெருமைபட பேசுகின்றது. தெய்வ வழிபாடு களில் நீராடுதல் என்பது முதன்மையான ஒன்றாகும். கோயில்களில் தெய்வங்களுக்குப் பூசை செய்யும் முன்னர் முதலில் தெய்வத்தை நீராட்டுவர். பூசை முடித்தப் பின்னர் இடும் படையலில் நீர் முக்கிய அங்கம் வகிக்கிறது. தெய்வத்தின் வேட்கை யைப் போக்க இந்த நீர் முதன்மையாகப் படைக்கப்படுகின்றது. இது சிறு தெய்வத் திற்கும் பெருந்தெய்வத்திற்கும் பொதுவான தாக அமையும். தெய்வத்தை நீராட்டும் இந்த சடங்கியல் முறையானது நடுகல்லிலி ருந்து தொடங்குகின்றது. நடுகல்லை மக்கள் நீராட்டி நெய்விளக்கேற்றிப் பலியூட்டியுள்ள னர். இதனை,

**புடைநடு கல்லின் நாட்பலி யூட்டி**
**நன்னீ ராட்டி நெய்ந்நறைக் கொளிஇய**

(புறநானூறு - 329:2,3)

என்கிறது புறநானூறு. சில இடங்களில் வெறுமனே நீரை மட்டும் படைக்கப்படாமல் நீருடன் தேங்காய் நீர் கலந்தும், தனியே இளநீரும் படைக்கப்படுகின்றது. எல்லா வகையான வைணவக் கோயில்களிலும் துளசி கலந்த நீரினைப் படைத்து, பின்னர் பக்தர்களுக்கும் அது வழங்கப்படுகின்றது. திருச்சிராப்பள்ளி மாவட்டம் திருவரங்கம் தாலுகாவில் இனாம்புலியூர் என்னும் கிராமத்தில் உள்ள மாரியம்மன் கோயிலில் வேப்பிலை அரைத்துக் கலந்த நீர் படையலாக அமைகின்றது. இந்த நீர் அம்மை போன்ற நோய்களைத் தீர்க்கும் என்ற நம்பிக்கையும் இவ்வூர் மக்களிடையே உண்டு. அதேபோல் திருச்சிராப்பள்ளி மாவட்டம் மணப்பாறை தாலுகாவிற்கு உட் பட்ட வளநாடு மற்றும் வீரப்பூர் கிராமங் களில் அண்ணன்மார் (பொன்னர், சங்கர்) கோயில்களில் முனியப்பன் முன்னர் படைக்கப்படும் நீரை பக்தர்களின் முகத்தில் தெளித்து அவர்களின் இருளைப் போக்கு கின்றனர். பொதுவாக அனைத்துக் கோயில் களிலும் நடைபெறும் குடமுழுக்குப் பெரு விழாவும் நீர் வழிபாடு சார்ந்தவையே.

**மஞ்சள் நீர்**

மஞ்சளை தமிழர்கள் ஆரோக்கியம் தொடர்பான பொருளாகவேப் பார்க்கின்றனர். ஆனால் மஞ்சள் என்பது பெண்களோடும் மங்களத்தோடும் தொடர்புடையதாய்க் கொள்கின்றனர். கிருமி எதிர்ப்பு மஞ்சளில்

உள்ளதாகக் கூறப்படுகின்றது. குழந்தைக ளுக்குத் தேய்த்துக் குளிப்பாட்டும் பொருட்டு மஞ்சள் மிகவும் முக்கியமானதாகக் காணப் படுகிறது. பெரியாழ்வார் தன்னுடைய பாசுரத்தில் கண்ணனை நீராட அழைக்கும் பொருட்டு,

**“மஞ்சளும் செங்கழுநீரின் வாசிகையும் நாறுசாந்தும்**

**அஞ்சனமும் கொண்டு வைத்தேன் அழகனே நீராட வாராய்”** (பெரியாழ்வார் திருமொழி -154:3,4)

என்று குறிப்பிடுவதிலிருந்து ஆண் குழந்தை யானாலும் மஞ்சள் கலந்த நீர் குளிப்பதற் குப் பயன்பட்டுள்ளது. இது நோய்த் தொற்றிலிருந்து குழந்தைகளைக் காக்கும் என்பதினாலேயே ஆகும்.

தெய்வ வழிபாட்டிலும் கூட மஞ்சள் நீர் மிகவும் முதன்மையாகின்றது. மஞ்சள் நீர் படைக்கப்படுவதோடு மட்டுமல்லாமல் அந் நீரை தெய்வச்சிலையின் மீது ஊற்றி பூசை செய்யவும் பயன்படுகிறது. திருவிழாக்களின் இறுதி நாட்களில் மஞ்சள் நீராட்டு விழா மிகவும் விமர்சையாகக் கொண்டாடப்படும். அதில் முதலில் தெய்வமானது மஞ்சள் நீராண்டு, பின்னர் மக்களும் மகிழ்வுடன் நீராடுகின்றனர். பருவமடைந்தப் பெண்ணிற்கு மஞ்சள் நீரே முதல் நீராகின்றது. தெய்வம் ஏறி அருள் வாக்கு கூறும் பெண்கள், வாக்கு கூறி முடித்த பின்னர் மஞ்சள் நீரைப் பருகி அருள் வந்ததை இறக்குகின்றனர். மஞ்சள் நீரின் பயன்பாடு அகத்தூய்மைக்கும், புறத் தூய்மைக்கும் மேன்மையாக மக்களிடையே பயன்பட்டுக் கொண்டுதான் இருக்கின்றது.

## பானக்காரமும் நீர்மோரும்

பானக்காரம் என்பது புளி கரைக்கப்பட்ட நீரில் கருப்பட்டி வெல்லத்தினையும், ஏலக்காய் பொடியினையும் தூவி கரைக்கப் பட்ட கரைசல் ஆகும். சோர்வடைந்தவர்கள் இந்நீரைப் பருகினால் புத்துணர்வு அடைவார் கள். நீர்மோரும் அவ்வாறே. விழாக்காலங் களில் கோயில்களில் படைக்கப்படுவதில் இந்த நீர்மோரும், பானக்காரமும் முக்கிய இடம் பெறுகின்றது. தெய்வத்துடன் உலா வந்தவர்களுக்கும், பொதுமக்களுக்கும் நீர்மோர்ப்பந்தல் அமைத்தும் இது தானமாக வழங்கப்படுகின்றது. களைப்புடனும், தாகத் துடனும் வருபவர்களுக்கு இந்த பானம் சிறந்த புத்துணர்வு அளிக்கின்றது. **“விஜய தசமி எனப்படும் புரட்டாசி மாதம் வளர்பிறை பத்தாம் நாளில் எருமைத்தலை அரக்கனைத் தாய்தெய்வம் போரிட்டு அழிக்கின்றது. இச்சடங்கு ஒரு பாவனையாக, பெரும்பாலும் கோயிலுக்குச் சற்றுத் தள்ளி அமைந்த ஒரு திடலில் நடக்கிறது. இந்த போர் நிகழ்ச்சி முடிவடைந்தவுடன் போரிட்ட களைப்புத் தீர தாய்த் தெய்வத்திற்கு உழுந்தஞ் சுண்டலும் பானக்காரமும் படைக்கப்படும்”.** (பண்பாட்டு அசைவுகள். தொ.பரமசிவம். ப-41) என்ற கூற்று மேற்கூறியதை உறுதி செய்கின்றது. இது பழங்காலத்தில் போரில் களைத்துப் போகும் மறவர்களுக்கு வழங்கும் புத்துணர்வு பானமாக இருக்கவும் இடமுண்டு.

## முடிவுரை

தமிழர்களின் வழிபாட்டுச் சடங்கியல் மட்டு மல்லாமல், வாழ்வினில் நடைபெறும் எல்லாச் சடங்கியல் முறையிலும் நீர் முதன்மை அங்கமாகப் பயன்பட்டது. நீரினையே எல்லா வற்றிற்கும் முதன்மைப் பொருளாகக் கருதினர். நீர்க்கரகம், நீர்க்காவடி, பன்னீர்க் காவடி போன்ற எல்லாம் நீரோடு தொடர்பு டையவையே. தமிழர்களுக்கு முதன்மைத் தேவை நீராகப் பயன்பட்டதும் அதனை தெய்வ வழிபாட்டிற்கும், வாழ்வியல் சடங்கு முறைகளுக்கும் முதன்மை ஆதாரமாய்ப் பயன்படுத்தியுள்ளனர்.

## துணைநூற்பட்டியல்


- இளம்பூரணனார் (உ.ஆ), தொல்காப்பியம் பொருளதி காரம், சாரதா பதிப்பகம், திருவெல்லிக்கேணி, சென்னை-600005, ஆறாம் பதிப்பு – ஜீன் 2008.
- ஔவை துரைசாமிப் பிள்ளை (உ.ஆ), புறநானூறு மூலமும் உரையும், சாரதா பதிப்பகம், ராயப்பேட்டை, சென்னை– 600014, முதற்பதிப்பு – 2015.
- கேசவய்யங்கார்(ப.ஆ), நாலாயிர திவ்யப்ரபந்தம், பார்த்தசாரதி அய்யங்கார்(பப்ளிஷர்), அட்வகேட், தேவகோட்டை–1951.
- சதானந்தன்.சி, சிறுதெய்வ வழிபாடும் நம்பிக்கை களும், சாரதா பதிப்பகம், ராயப்பேட்டை, சென்னை – 600014முதற்பதிப்பு – 2018.
- திருஞானசம்பந்தம்.ச (உ.ஆ), புறப்பொருள் வெண் பாமாலை (தெளிவுரை), கதிர் பதிப்பகம், தெற்கு வீதி, திருவையாறு, முதற் பதிப்பு – டிசம்பர் – 2018
- பரமசிவம்.தொ, பண்பாட்டு அசைவுகள், காலச்சுவடு பப்ளிகேஷன்ஸ் (பி) லிட், கே.பி.சாலை, நாகர் கோவில், இருபதாம் பதிப்பு – 2021